பக்கங்கள்:-28

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | கார்த்திகை 07 திங்கட்கிழமை 24.11.2025 | அதிர்வு 116

## பரீட்சைக்கு முன்பே கசிந்த வினாத்தாள்?

### சி.ஐ.டியிடம் முறைப்பாடு

இந்த வருடம் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் பொருளாதார வினாத்தாள் பரீட்சைக்கு முன்னதாகவே கசிந்ததாகக் கூறும் அறிக்கைகளை விசாரிக்க, 03▶

### அமைச்சர் சந்திரசேகர் திட்டவட்டம்

# ரணில், ராஜபக்ஷக்கள் மீண்டும் அரியணை ஏற மக்கள் இடமளிக்கமாட்டர்

## மாவீரர்களை நினைவேந்த எந்தத் தடையும் இல்லை இம்மாத இறுதிக்குள் துயிலும் இல்லங்கள் விடுவிப்பு





(எஸ். நிதர்ஷன்)

“கடந்த காலங்களில் நாட்டை எப்படி ரணில், ராஜபக்ஷக்கள் சூறையாடினார்கள் என்பது எமது மக்களுக்கு நன்கு தெரியும். எனவே, ரணில், ராஜபக்ஷக்கள் மீண்டும் ஆட்சியமைக்க எமது மக்கள் இடமளிக்கமாட்டார்கள்.”

- இவ்வாறு அமைச்சரும் யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் நேற்று தெரிவித்தார்.

“போரில் மரணித்த மாவீரர்களைத் தமிழ் மக்கள் நினைவேந்த எமது அரசு எந்தத் தடையும் ஏற்படுத்தவில்லை. 03▶

# இளவரசர் நாமலின் கனவு மீளவும் ‘ஐஸ்’லாந்தில் கலைந்துவிட்டதாம்



## இப்படி நுகேகொடைக் கூட்டத்தை கிண்டலடிக்கின்றது ஆளும் தரப்பு

இளவரசர் நாமல் ராஜபக்ஷவின் கனவானது ‘ஐஸ்’லாந்தில் மீண்டும் கலைந்துள்ளது என்பதையே அரசுக்கு எதிரான நுகேகொடைக் கூட்டம் வெளிப்படுத்தியுள்ளது என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தேவானந்த சுரவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“நுகேகொடைக் கூட்டத்தை குழப்புவதற்கு ஆளுங்கட்சி சதி செய்தது என்று கூட்டு எதிரணி குற்றஞ்சாட்டியுள்ளது. உண்மையில் நுகேகொடை கூட்டத்துக்கு அரசு எவ்வித இடையூறும் செய்யவில்லை.

இளவரசர் நாமல் ராஜபக்ஷவின் கனவானது ‘ஐஸ்’லாந்தில் மீண்டும் கலைந்துள்ளது என்பதையே நுகேகொடைக் கூட்டம் 03▶



மேல் நிலை அதிகாரிகள் மீது பழியைப் போட்டுத் தப்புவது அல்லது மேல் நிலை அதிகாரிகளை மட்டும் குறை கூறுவது இங்கு வழக்கமாகி விட்டது. இடைநிலை அல்லது கீழ் நிலை அதிகாரிகள் தொடர்பிலும் எமது மக்கள் உண்மையை அறிய வேண்டும். ஏனெனில் இவர்கள் விடும் தவறுகளையும் சேர்த்தே ஒட்டுமொத்தமாக மேல் நிலை அதிகாரிகள் பழியைச் சுமக்கும் நிலை ஏற்படுகின்றது.

அதிலும் வடக்கில் கல்விப் பெறுபேறுகள் மட்டும் விழுந்து விடவில்லை, கல்வி நிர்வாகமும் சேர்ந்துதான் குழம்பிப் போய்க் கிடக்கின்றது என்பது வெளிப்படுகின்றது.

தற்போது க.பொ.த உயர்தரப் பரீட்சை இலங்கை 03▶



# பருத்தித்துறையில் மாவீரர்களின் பெற்றோர் மதிப்பளிப்பு நிகழ்வு

மாவீரர் நாளை முன்னிட்டு மாவீரர் பெற்றோர், உரித்துடையோர் மதிப்பளிப்பு நிகழ்வு பருத்தித்துறையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கனடா வாழ் தாயக உறவுகளின் ஆதரவுடன், யாழ். மாவட்ட நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழுவினால் முன்னெடுக்கப்பட்ட இந்த நிகழ்வு பருத்தித்துறை சூரிய மஹால் மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது வடமராட்சி பிரதேசத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள மாவீரர் பெற்றோர், உரித்துடையோர் அழைத்து வரப்பட்டு மதிப்பளிக்கப்பட்டனர்.


மாவீரர்கள் நினைவாக பொதுச்சுடர் ஏற்றப்பட்டு மாவீரர் மாதிரி கல்லறைக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசிய கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம், பருத்தித்துறை நகரசபை தவிசாளர் வின்சென்ட போல் டக்ளஸ் போல், உபதவிசாளர் தே.தேவராஜேந்திரம், வல்வெட்டித்துறை நகரசபை உப தவிசாளர், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர்கள், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர் மற்றும் நூற்றுக்கு மேற்பட்ட மாவீரர் பெற்றோர், ரித்துடையோர் பங்கேற்றிருந்தனர்.

நிகழ்வில் பங்கேற்றவர்களுக்கு பயன் தரு மரக்கன்றுகள் வழங்கிவைக்கப்பட்டன.

















# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இரகசியம் பரகசியம்...

முழுவதும்தான் நடக்கின்றது. ஆனால் வடக்கில் என்னதான் நடக்கின்றது. வடக்கில் மட்டும் புதினம் நடக்கின்றது. அப்படி சங்கதிகள் சிரியாய் சிரிக்கும் நிலைமை.

வடமராட்சியில் பரீட்சை எழுதிக் கைய ளித்த 21 மாணவர்களின் விடைத்தாள்கள் அனுப்பி வைக்கப்படாமல் இழுபட்ட விட யம் உலகம் அறிந்தது. இதன் பெறுபேறு எவர் கையில் என்பது யாமறியோம்.

இதன் பின்பு பூநகரி மத்திய கல்லூ ரியில் கடந்த வெள்ளிக் கிழமை 21 ஆம் திகதி பரீட்சைக் கடமை நேரம் பரீட்சை மேற்பார்வையாளர் மதுபோதையில் இருந்த விடயம் கல்விப் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, கல்விப் பணிப்பாளர் நேரில் சென்று விடயத்தை உறுதி செய்து மேற்பார்வை யாளரை உடன் பணி நீக்கம் செய் துள்ளார்.

இவர் இதே கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிக் கோட்டத்திற்கு உள்பட்ட ஓர் பாடசாலையின் அதிபராகப் பணியாற் றுபவர். அதிபர் பதவியும் இனி எந்த நிலையோ தெரியவில்லை.

இவை இவ்வாறென்றால் யாழ்ப்பாணம் வடமராட்சியில் மற்றுமோர் பாடசாலை யில் பரீட்சை எழுதிய மாணவன் ஒருவன் இரண்டாம் பகுதி விடைத்தாளையே கையளிக்காது வீட்டிற்கு எடுத்துச் சென்று விட்டான். கையளிக்காது விட்டமை மாண வனின் தவறு மட்டுமல்ல, பரீட்சை மேற் பார்வையாளர்களும் எத்தனை மாண வர்கள் பரீட்சை எழுதுகின்றனர், எத்தனை பேருக்கு விடைத்தாள் வழங்கியது , எத் தனை பேர் மீளக் கையளித்தனர் என்பத னைக் கண்காணிக்க வேண்டுமல்லவா?

* * *

இந்த நாடாளுமன்றத்தில் கல்விச் சான்றிதழ் விவகாரங்கள் தொடர்ந்து சூடு பிடித்து பட்டையைக் கிளப்பி வருகிறது.

அந்த வரிசையில் இப்போது அரசி யலில் அதிக ஆரவாரம் பண்ணிக் கொண்டு நிற்கும் இளம் இரத்தமும் மொட் டுக் கட்சியின் முரட்டுக் காளையுமான நாமல் ராஜபக்ஷவின் பட்டப் படிப்புக் கான கல்விச் சான்றிதழ் விவகாரம் கடந்த வாரம் சூடு பிடித்தது.

அவர் பெற்றுக்கொண்ட சட்டமாணி பட்டதாரிச் சான்றிதழ் குறித்து நாடாளு மன்றத்தில் அரசுத் தரப்பிலிருந்து பலத்த சந்தேகங்கள், விமர்சனங்கள் எழுப்பப்பட்டன.

இதற்கு முன்னர் எதிர்க்கட்சித் தலை வர் சஜித் பிரேமதாஸவின் பட்டதாரி பட்டம் குறித்தும் பல்வேறு கேள்விகள் எழுப்பப் பட்டமையை அடுத்து, அவர் தமது கல் வித் தகுதி சான்றிதழ்களை நாடாளு மன்றத்தில் எடுத்து வந்து விலாவாரியாக சமர்ப்பிக்க, விடயம் அடங்கிப் போய் விட்டது.

தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்ற தும் நாடாளுமன்றுக்கு முதலாவது சபா நாயகராக தெரிவு செய்த அசோக ரண்வல வின் கலாநிதிப் பட்டம் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. பெரிய இழுபறியின் பின்னர் அவர் சபாநாயகர் பதவியை இராஜினாமாச் செய்து விலக வேண்டிய வரானார். எனினும் தாம் தமது கலா நிதிப் பட்டச் சான்றிதழை சமர்ப்பித்து, உண்மை நிலையை நிரூபிப்பார் என்று குறிப்பிட்டு ஒரு வருடம் கடந்து விட்டது. இன்னமும் அந்த விவகாரத்தில் சந் தேக நிலைமை நீடிக்கிறது. தமது கலா நிதிப் பட்டத் தகைமையை நிரூபிக்காம லேயே அசோக ரண்வல நாடாளுமன்ற உறுப்பினராக நீடிக்கிறார்.

அந்த வரிசையில் இப்போது குற்றச் சாட்டு விரல் நாமல் பக்கத்தில் திருப்பப் பட்டுள்ளது.

இனித் தொடர்ந்து, யார் யாருடைய விவகாரங்கள் நாடாளுமன்றுக்கு வருமோ தெரியவில்லை.

---

## ரணில், ராஜபக்ஷக்கள்..

வடக்கில் பாதுகாப்புத் தரப்பினரின் கட்டுப்பாட்டுக்குள் காணப்படுகின்ற சில மாவீரர் துயிலும் இல்லங்களை இந்த மாத இறுதிக்குள் விடுவிப்பதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன.” – என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாட்டைக் குட்டிச் சுவராக்கிய வங்கு ரோத்து அரசியல்வாதிகள் இணைந்து ஆட்சியைக் கலைக்கப் போவதாகக் கூக்குரல் இட்டு வருகின்றனர்.

நாட்டை 70 வருட காலத்துக்கு மேலாக சீரழித்த வரலாற்றை எமது தேசிய மக்கள் சக்தி அரசு மாற்றி அனைத்து இன மத மக்களும் ஒற்றுமையாக வாழக்கூடிய ஒரு தாய் நாட்டைக் கட்டியெழுப்பி வரு கின்றோம்.

கடந்த காலங்களில் குடும்பமாக நாட்டைச் சூறையாடியவர்கள் துரத் தப்பட்ட நிலையில் நேர்மையான ஓர் அரசியல் கலாசாரத்தை எமது அரசு முன்னெடுத்து வருவதைச் சகித்துக் கொள்ள முடியாத கூட்டம் இனவாதத்தைத் தூண்ட முனைகின்றது.

போரில் மரணித்த மாவீரர்களைத் தமிழ் மக்கள் நினைவேந்த எமது அரசு எந்தத் தடையும் ஏற்படுத்தவில்லை.

கடந்த காலங்களில் நினைவிடங்கள் உடைக்கப்பட்ட, கொடிகள் அறுத்தெறி யப்பட்ட வரலாறுகளையும் மாற்றி பூரண மாக நினைவேந்தல் உரிமையை வழங்கி யது எமது அரசே.

நாட்டின் ஜனாதிபதி அநுரகுமார திஸ ாநாயக்க பாதுகாப்புத் தரப்பிடம் இருக் கின்ற மாவீரர் துயிலும் இல்லங்களை விடுவிப்பதற்கான அறிவுறுத்தல்களைப் பாதுகாப்பு அமைச்சுக்கு ஏற்கனவே வழங்கியுள்ளார். அதன் அடிப்படை யில் இந்த மாத இறுதிக்குள் சில துயிலும் இல்லங்கள் விடுவிக்கப்படலாம் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

அதேபோல் வடக்கில் காணி விடு விப்புகள் திட்டமிட்டபடி படிப்படியாக இடம்பெறும். அதில் எந்தவிதமான தயக்கமும் இல்லை.

அண்மையில் வன்னி நிலப்பரப்பில் இராணுவத்திடம் இருந்த ஒரு பகுதி காணி விக்கப்பட்ட நிலையில் அதனை உரியவர்களுக்கு வழங்குவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக அறிகிறேன்.

எமது அரசு நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப் பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்காகப் புதிய அர சமைப்பு தொடர்பில் கவனம் செலுத்தி வருகின்றது.

அதைப் பொறுக்க முடியாத சிலர் தெற்கிலும் வடக்கிலும் இருக்கின்ற நிலை யில் அவர்கள் ஏதாவது குழப்பத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நினைப்பில் இருக்கின்றார்கள்.

அண்மையில் திருகோணமலையில் ஏற்படுத்தப்பட்ட குழப்பங்களுக்குப் பின் னால் இனவாத சக்திகளின் செயற்பாடு கள் இருக்கின்றன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவர்களின் நோக்கம் மக்களை வாழவைப்பது அல்ல. தமது அரசியல் இருப்புக்களை தக்கவைத்துக் கொண்டு நாட்டைச் சூறையாடுவதே இவர்களின் நோக்கம்.

இதை நான் விலாவரியாகக் கூற வேண்டிய தேவையில்லை. கடந்த காலங் களில் நாட்டை எப்படி ரணில், ராஜபக் ஷக்கள் சூறையாடினார்கள் என்பது எமது மக்களுக்கு நன்கு தெரியும். ரணில், ராஜபக்ஷக்கள் மீண்டும் ஆட்சியமைக்க எமது மக்கள் இடமளிக்கமாட்டார்கள். ஆகவே, எமது அரசை வீழ்த்துவதாகக் கூறிக்கொண்டு இனங்களுக்கிடையில் முறுகல் நிலையைத் தோற்றுவிப்பதற்கு வங்குரோத்து அரசியல்வாதிகள் பல விதமான செயற்பாடுகளைச் செய்வார்கள். மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.” – என்றார்.

---

## இளவரசர்..

வெளிப்படுத்தியுள்ளது.

ரணில், மஹிந்த போன்றவர்களை மக்கள் விரட்டியடித்தனர். எனவே, அரசி யல் ரீதியில் வங்குரோத்து அடைந்த வர்களுக்கு மீள உயிர்கொடுக்க முடியாது.” – என்றார்.

---

## பரீட்சைக்கு முன்பே...

பரீட்சைகள் திணைக்களம் குற்றப் புல னாய்வுத் துறையிடம் முறைப்பாடு அளித் துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் துணைத் தேர்வு ஆணையரால் இந்த முறைப்பாடு அளிக் கப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது.

சமீபத்திய நாட்களில், உயர்தரப் பொருளாதார வினாத்தாள் கசிந்ததாகக் கூறி சமூக ஊடகங்களில் பல்வேறு தகவல்கள் பரவின.

இருப்பினும், உள்ளக விசாரணை யில், அத்தகைய சம்பவம் நடந்ததற் கான உறுதியான ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் குறித்த விடயம் தொடர்பில் முறையான விசாரணைகளை முன்னெடுக்க சி.ஐ.டியிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது எனப் பரீட்சைகள் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள் ளது.



# ரணில் - சஜித் கட்டாயம் ஒன்றிணைய வேண்டும்!

## இல்லையேல் ஆதரவாளர்கள் வேறு அரசியல் முகாமை நோக்கி நகருவார்கள் என்று ஹரின் பெர்னாண்டோ பகிரங்க எச்சரிக்கை



“ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும், சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் கட்டாயம் ஒன்றிணைய வேண்டும். அவ்வாறு இல்லையேல் எமது ஆதரவாளர்கள் வேறு அரசியல் முகாமை நோக்கி நகரக்கூடும்.”

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன இணைந்து கூட்டங்களை நடத்த வேண்டும். அதற்குரிய இடைவெளியை வழங்கினால் எமது ஆதரவாளர்கள் மாற்று அரசியல் முகாமை நோக்கி நகரக்கூடும். எனவே, அடுத்த கூட்டத்திலாவது இரு தரப்புகளும் இணைய வேண்டும். அவ்வாறு இணைவார்கள் என நம்புகின்றோம்.

நுகேகொடைக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஆதரவாளர்களே 75 சதவீதமானோர் பங்கேற்றனர். கூட்டத்தை நடத்துவதற்கு அந்தக் கட்சியே முன்னின்றது. அதனால்தான் நாமல் ராஜபக்ஷவை இளவரசர் என விளித்தேன். இந்த விடயத்தைப் பெரிதுபடுத்த வேண்டியதில்லை. இந்த நாட்டில் இனி இளவரசர்கள் தெரிவாகப் போவதில்லை.” – என்றார்.

# கனமழையால் 12 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிப்பு

இலங்கையின் பல பகுதிகளில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் கன மழை காரணமாக 12 மாவட்டங்களில் உள்ள பல பிரதேச செயலகப் பிரிவுகளின் குடியிருப்பாளர்களுக்கு விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் விடுத்துள்ள இந்த எச்சரிக்கை நேற்று பிற்பகல் 2:30 மணி முதல் இன்று பிற்பகல் 2:30 மணி வரை அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



அதன்படி, பதுளை, களுத்துறை, கொழும்பு, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, கண்டி, கேகாலை, நுவரெலியா, மாத்தளை, குருநாகல் மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் மண்சரிவு அபாயம் தொடர்ந்து நீடிப்பதால் எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

எனவே, பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும், நிலைமைகளைக் கண்காணித்து பொலிஸ் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகளின் அறிவுறுத்தல்களுக்கு அமையப் பாதுகாப்பாகச் செயற்பட வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளனர்.




### சமஷ்டிக் கட்டமைப்புடனான

# எந்தப் பெயரைக் கொண்ட தீர்வையும் ஏற்கத் தயார்!

### கஜேந்திரகுமாருக்குத் தமிழரசுக் கட்சி பதிலடி

**(எஸ்.நிதர்ஷன்)**

"பிரிக்கப்படாத நாட்டுக்குள் மீளப் பெற முடியாத அதிகாரப் பகிர்வில் சமஷ்டிக் கட்டமைப்பைக் கொண்ட எந்தப் பெயரைக் கொண்ட தீர்வையும் நாம் ஏற்கத் தயார். நாம் ஒற்றையாட்சியை ஏற்கவுமில்லை. சமஷ்டியைக் கைவிடவுமில்லை."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த காலத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் கூட்டாகச் செயற்பட எல்லாக் கட்சிகளுடன் பேசினோம். எல்லோரின் வீடுகளுக்கும் தேடிப் போனேன். ஒரு வரும் ஒத்துழைக்கவில்லை.

பிரிக்கப்படாத நாட்டுக்குள் மீளப் பெற முடியாத அதிகாரப் பகிர்வில் சமஷ்டிக் கட்டமைப்பைக் கொண்ட எந்தப் பெயரைக் கொண்ட தீர்வையும் நாம் ஏற்கத் தயார். ஒற்றையாட்சியை ஏற்கவுமில்லை. சமஷ்டியைக் கைவிடவுமில்லை. கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் செல்வராசா கஜேந்திரனும் சொல்வது போல் தமிழரசுக் கட்சி, தமிழ் மக்களுக்குத் துரோகம் செய்யவில்லை. கடல் வத்தும் கடல் வத்தும் எனப் பார்த்துக் கொக்கு மாதிரி குடல் வத்திப் போக முடியாது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தங்களுடன் பேசியிருக்கலாமே என்கின்றார். மாகாண சபையை வேண்டாம் எனச் சொல்பவரை எவ்வாறு அழைத்துச் செல்ல முடியும்.

அரசியல் தீர்வை அடைந்த பின்னர் ஏனைய பிரச்சினையைப் பார்க்கலாம் என்கிறார். அரசியல் தீர்வு வருவதற்குள் எல்லாம் முடிந்து விடும்.

இணைந்து செயற்படுவது தொடர்பில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு அழைப்பு விடுத்தோம். அடுத்த மாத முற்பகுதியில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் பேசப் போகின்றோம். அதை ஒத்துழைப்பை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமாருக்கும் வழங்கினோம்.

பொது விடயத்தில் அரசமைப்பும் வரும் மாகாண சபையும் வரும்.

கொச்சைப்படுத்தும் கருத்துக்களைச் சொல்ல வேண்டாம். மேட்டுக்குடியில் இருந்து நாங்கள் வரவில்லை என்பதால், நீங்கள் நாம் சொல்வதைக் கேட்க மாட்டீர்களே.

ஜனாதிபதியுடனான சந்திப்புக்குப் பின்னர் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்ட அறிக்கையில், மாகாண சபைத் தேர்தல் மற்றும் புதிய அரசமைப்பொன்றின் அவசியம் குறித்து இதன்போது ஆராயப்பட்டதோடு, வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தொடர்ந்தும் பழைய அரசியல் தீர்வு பொருத்தமற்றது என்பதால் அதற்காகப் புதிய அரசியல் தீர்வை நோக்கிச் செல்ல வேண்டுமென அரசு எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இங்கு குறிப்பிட்டார் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதியுடைய வரைபு வந்த பின்னர் பேசலாம் என்றே சொன்னோம். நாங்கள் அரசமைப்பு வரையோனும் எனக் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சொல்கின்றார். அது பிழையான அணுகுமுறை. தமிழரசுக் கட்சி இறுமாப்புடன் கதைக்கவில்லை.

கஜேந்திரகுமாருக்கும் கடிதம் எழுதியிருக்கின்றோம். அடக்கமாகப் பேசக் காரணம் ஒற்றுமையாகப் பயணிக்க விரும்புகின்றோம்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்மைத் தொடர்ச்சியாக விமர்சிக்க முடியாது. நியாயமான விமர்சனத்தை ஏற்கலாம். துரோகம், காட்டிக்கொடுப்பு, இனத்துரோகி என்ற வசனங்களே இவர்களுக்குத் தெரியும். மக்களுக்குப் பதில் சொல்ல நாம் தயார். சொல்லில் தொங்கிக் கொண்டு மக்களை ஏமாற்ற வேண்டாம்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மாகாண சபை வேண்டாம் என்று சொன்னால் நாம் ஒத்துப்போக முடியாது. கஜேந்திரகுமாருடன் சுமுகமான உறவைப் பேணவே விரும்புகின்றோம்.

நீங்கள் அடிக்க வெளிக்கிட்டால் நாம் மென்மையாகத் திருப்பி அடிப்போம். எங்களுடைய வாக்கு வங்கி குறைந்து விட்டதுதான். ஏன் உங்கள் வாக்கு வங்கி குறையவில்லையா? எங்களை நீங்கள் தாக்கியதால்தான் தேசிய மக்கள் சக்தி வளர்ந்தது.

சமஷ்டியைக் கைவிடமாட்டோம் என ஜனாதிபதிக்கு முன்னாலேயே சொல்லி இருக்கின்றோம். நான் இனித் தேர்தல் கேட்கப் போவதில்லை. ஆனால் எமது கட்சியில் கைவைத்தால் எந்தத் தரத்தில் பதில் வருகின்றதோ அதே தரத்தில் பதில் கொடுக்கப்படும்.

ஒற்றுமையாக இனம் சார்ந்து ஒவ்வொருவரும் தங்கள் தளத்தில் இருந்து கொண்டு பொது விடயங்களில் ஒன்றாகப் பொது மையத்தில் இருந்து செயற்பட அழைப்பு விடுக்கின்றேன். இதற்குச் சாதகமாகப் பதிலளியுங்கள். ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சாதகமாகப் பதிலளித்துள்ளது. கஜேந்திரகுமாரும் கடிதம் கிடைத்துள்ளது என்று பேட்டியளித்துள்ளார்.

கூட்டுத் தலைமையாகப் பொது விடயங்களில் ஒன்றாகுவோம்.

மக்கள் உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். இனியாவது தமிழ்த் தேசியக் கட்சிகள் பொது விடயத்தில் இணைந்து பேச வேண்டும்." – என்றார்.






# தமிழரசின் மன்னார் கிளை புதிய அலுவலகம் திறப்பு!

**(மன்னார் நிருபர்)**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளை புதிய அலுவலகம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கட்சியின் மன்னார் மாவட்ட தலைவர் ப.ஜே. குமார் தலைமையில் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த அலுவலகம் மன்னார் – ரயில் வீதி பிரதான வீதியில் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம், கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் இந்த அலுவலகத்தை வைபவ ரீதியாகத் திறந்து வைத்தனர்.

இதன்போது கட்சியின் முக்கியஸ் தர்கள், உறுப்பினர்கள், கட்சியின் மன்னார் மாவட்ட உள்ளூராட்சி சபை உறுப் பினர்கள் எனப் பலர் கலந்துகொண்ட னர்.



























# உரும்பிராயில் மாவீரர்களின் பெற்றோர் மதிப்பளிப்பு நிகழ்வு

உரும்பிராயில் அமைந்துள்ள தியாகி பொன் சிவகுமாரன் நினைவுத் தூபிக்கு அருகில் மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உரித்துடையோர் நேற்றுக் கௌரவிக்கப் பட்டனர்.

உரும்பிராய் சந்தியிலிருந்து கௌர வத்துடன் அழைத்துவரப்பட்ட மாவீரர் களின் பெற்றோர் மற்றும் உரித்துடை யோர், தியாகி பொன் சிவகுமாரனின் நினைவுதத் தூபிக்கு அஞ்சலி செலுத் தினர்.

பின்னர் கௌரவிப்பு இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட அவர்கள், அங்கு கௌரவிக்கப்பட்டனர். அத் துடன், அவர்களுக்கு மரக்கன்றுகளும் நினைவுப் பொருள்களும் வழங்கப் பட்டன.

இந்நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கொள்கை பரப்புச் செயலாளர் காண்டீபன், வலி. கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் நிரோஷ், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பொது மக் கள் எனப் பல தரப்பினர் பங்கேற்றி ருந்தனர்.











நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தகுதி இழந்த தலைவர்

அனைத்து மத மற்றும் கலாசார அடையாளங்களையும் மதித்து, இந்த நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் சுதந்திரமாக வாழ வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதற்காக அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டத்திற்கு அனைவரும் ஆதரவளிக்குமாறு ஜனாதிபதி ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க அழைப்பு விடுத்திருக்கின்றார். அத்துடன் நமது நாடு எந்தவொரு இனவாத வலையிலும் சிக்குவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகளை நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்த போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

ஜனாதிபதியின் கருத்து நல்லது. ஆனால் அவை வெறும் கருத்தியலாக - நடைமுறைச் சாத்தியமற்ற வீண் ஜம்பப் பேச்சாக - வாய்ப்பந்தல் போடுகின்ற விவகாரமாக - இருப்பதில் அர்த்தமில்லை.

அதுதான் இலங்கையில் பிரச்சினை.

இந்த ஜனாதிபதி மட்டுமல்லர், இதற்கு முன்னர் அதிகாரத்திலிருந்த எட்டு ஜனாதிபதிகளும் கூட, இப்படித்தான் தத்துவம் பேசினார்கள். வாய்ப் பந்தல் போட்டார்கள். ஆனால் செயலில் இந்த உபதேசப் பேச்சுக்கு மாறான பேரினவாத நிலைமைகள் தான் களத்தில் இடம்பெறுகின்றன.

அனைத்து மத மற்றும் கலாசார அடையாளங்களை மதித்தல் என்பது பௌத்தத்துக்கு மாத்திரம் தனி உரிமை தந்து, அதன் ஆதிக்கத்தை எல்லை மீறிக் கோலோச்ச அனுமதித்து, மற்றைய மத கலாசார விடயங்களை அழிக்க அனுமதித்து, தூண்டி விட்டு, வாளாவிருப்பது அல்ல.

தமிழர் தாயகம் எங்கும் அரச பின்னணியில் திட்டமிடப்பட்ட பௌத்த சிங்கள குடியேற்றங்களை முன்னெடுத்து, அதன் மூலம் இன ரீதியான குடியியல் பரம்பலை தலைகீழாக மாற்றியமைக்கும் நடவடிக்கை இந்த அரசின் கீழும் மோசமாக தொடர்கின்றது. பௌத்த ஆக்கிரமிப்பின் சின்னமாக தமிழர் தேசம் எங்கும் புத்தர் சிலைகள் அரச ஆதரவுடன் நிலைநிறுத்தப்படுகின்றன. அதற்கு அரசின் அதிகாரிகளும், அரச நிர்வாகமும், முப்படைகளும், பொலிஸும் முழு ஒத்துழைப்பு வழங்கும் பேரினவாத மேலாதிக்க நிலைமையே ஒழுங்குபடுத்தப்பட்ட முறைமையாக நாட்டில் நீடிக்கின்றது.

தமிழர் தாயகப் பிரதேசங்களில் கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில் கோலோச்சிய தொல்பொருள் திணைக்களத்தின் அடாவடிப் போக்கை மீறிய தீவிரம் இப்போது அநுரகுமார திஸநாயக்கவின் ஆட்சியின் கீழ் மோசமாகத் தொடர்கின்றது

இந்தப் பின்புலத்தில் சிறுபான்மையினரின் மத மற்றும் கலாசார அடையாளங்களை - தனித்துவங்களை - குடிப்பரம்பல் ரீதியான பிரதேசங்களை - அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கும் வகையில் தனது நிர்வாகத்தின் போக்கு செயற்படுவதை தடுத்து நிறுத்த முடியாத வக்கற்ற நிலையில் ஜனாதிபதி இருந்து கொண்டு, அனைத்து மத கலாசாரங்களையும் மதிப்பது குறித்து வெறும் வாய்ப் பந்தல் போடுவதில் அர்த்தமில்லை.

திருகோணமலையில் அத்துமீறி நிலைநிறுத்தப்பட்ட புத்தர் சிலையை இரவில் அகற்றி, காலையில் பதறி அடித்து மீண்டும் கொண்டு போய் அந்த இடத்தில் நிறுத்த உத்தரவிட்டமை மூலம் அல்லது அதற்கு அனுமதித்தமை மூலம் அனைத்து மதங்களையும் கலாசாரங்களையும் மதிக்கின்ற தலைவர் என்ற தன்னுடைய தலைமை குறித்த தகுதியை இந்த ஜனாதிபதி இழந்து விட்டார் என்பதுதான் உண்மை.

# O/L பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு வடக்கு மாகாணத்தில் புதிய செயற்றிட்டம்!

## ஆளுநர் வேதநாயகன் தலைமையில் கலந்துரையாடல்















ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் விளிம்பு நிலை மாணவர்களுக்கான கூடுதல் கல்வி ஆதரவை வழங்கும் நோக்கில் வடக்கு மாகாணம் புதிய செயற்றிட்டத்தை முன்னெடுக்கின்றது. இதனை முன்னிட்டு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் தலைமையில் கடந்த வாரம் கலந்துரையாடல் ஒன்று ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தொழில்நுட்ப உதவியுடன் அனலைதீவு மற்றும் எழுவைதீவு பிரதேசங்களில் ஏற்கனவே இணையவழி வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன. இந்த முயற்சியை மாகாணம் முழுவதும் விரிவாக்க ஆளுநரின் அறிவுறுத்தலின்படி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணக் கல்விப் பணிமனையின் தரவுகளின்படி, மாகாணத்தின் 13 வலயங்களிலும் சுமார் 2 ஆயிரத்து 500 மாணவர்கள் இந்த முறை ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைவதற்கான போதிய தகைமையின்மையுடன் உள்ளனர்.

இன்றைய கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த ஆளுநர், “கல்வி மட்டத்தை உயர்த்துவது மாகாணத்தின் முன்னுரிமை. ஸ்மார்ட் போர்ட் அல்லது ஸ்மார்ட் ரிவி வசதியுள்ள பாடசாலைகளை அடையாளம் கண்டு அவற்றில் இணையவழி வகுப்புகளை நடத்துங்கள். விளிம்பு நிலையிலுள்ள மாணவர்களை இணையவழியில் வகுப்புக்கள் நடைபெறும் பாடசாலைகளில் கட்டாயம் பங்கேற்க செய்யுங்கள். ஆசிரியர் ஒருவர் பாடசாலையில் பொறுப்பாக பணிபுரிய வேண்டும். மாணவர்களின் வரவு உறுதிப்படுத்தப்பட வேண்டும். பெற்றோர்களுக்கும் வகுப்புகள் குறித்து தெரிவிக்கப்பட வேண்டும்.” – என்று வலியுறுத்தினார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர், கணிதம் மற்றும் விஞ்ஞானப் பாடங்களுக்கான அலகு ரீதியான கற்பித்தல் மற்றும் பரீட்சைகள் ஏற்கனவே நடைபெற்று வருகின்றது என்றும், தேவைக்கேற்ப பிற பாடங்களையும் கற்பிக்க முடியும் என்றும் தெரிவித்தார். கொவிட் கால அனுபவம் இந்த முயற்சியை மேலும் சிறப்பாகச் செயற்படுத்த உதவும் என்றும் அவர் கூறினார்.

உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் பிற பாடங்களுக்கான தேவையைக் குறிப்பிட்டனர். கல்வி அமைச்சின் செயலாளர், செயற்றிட்டம் தொடர்பான தெளிவான வழிகாட்டுதல்களை அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வழங்க வேண்டியதையும், இலக்கு மாணவர்களை வகுப்புகளுக்கு இணைப்பது அதிபர்களின் பொறுப்பு என்பதையும் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர், பரீட்சைக்கு இரண்டரை மாதங்கள் உள்ள நிலையில், விளிம்பு நிலை மாணவர்களை சித்தியடையும் நிலைக்கு கொண்டுவர உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தயார் நிலையில் உள்ள பாடசாலைகள் மற்றும் மாணவர்களை இணைத்து வகுப்புகளை ஆரம்பிப்பது எனக் கலந்துரையாடலில் முடிவு செய்யப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர், மாகாண கல்விப் பணிப்பாளர், ஒவ்வொரு வலயங்களின் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் நேரடியாகவும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் இணையவழியாகவும் இணைந்தனர்.



# 5 கிலோ கொக்கெயினுடன் மலேசியப் பிரஜை கைது

சுமார் 5 கிலோ கிராம் கொக்கெயின் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவரை சுங்கத் திணைக்களத்தின் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்துக் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முன்னதாக 10 கிலோ கிராம் போதைப்பொருள் என தெரிவிக்கப்பட்டது.

எனினும் 5 கிலோ கிராம் கொக்கெய்ன் போதைப்பொருளே கைப்பற்றப்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதன் பெறுமதி சுமார் 250 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

அபுதாபியில் இருந்து வந்த மலேசியப் பிரஜை ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றனர்.




# போதைப்பொருள் கடத்தல்காரருக்கு உதவிய பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு தடுப்புக் காவல்

அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவருடன் தொலைபேசித் தொடர்புகளைப் பேணி, அவரது போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கைகளுக்கு உதவிய மற்றும் ஆதரவளித்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை 7 நாள்கள் தடுப்புக் காவலில் விசாரிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.


இந்த ஒழுங்கீனமான செயல் காரணமாக அந்த பொலிஸ் உத்தியோகத்தரின் பணிகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அங்கூருவத்தோட்ட பொலிஸ் நிலையத்தில் இணைக்கப்பட்டு தற்போது பாணந்துறை வலய குற்ற விசாரணைப் பிரிவில் கடமையாற்றும் கான்ஸ்டபிள் ஒருவருக்கே இவ்வாறு தடுப்புக் காவல் உத்தரவு பெறப்பட்டுள்ளது.

இந்த சந்தேகநபரை களுத்துறை மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவினர் கைது செய்தனர்.

மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர், போதைப்பொருள் கடத்தல்காரரின் நடவடிக்கைகள் தடையின்றி நடப்பதற்கு உதவியாகவும், அதற்கு சன்மானமாக பணத்தைப் பெற்றுள்ளார் என்று பொலிஸ் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து இரண்டு தொலைபேசி இலக்கங்களைக் கொண்ட சிம் அட்டைகள் கொண்ட சிறிய கைத்தொலைபேசி மற்றுமொரு ஸ்மார்ட் கைத்தொலைபேசி, வான் ஒன்று, 717,790 ரூபா பணம் என்பன பொலிஸால் கைப்பற்றப்பட்டுள்ளன.



# சுற்றுலாப் பயணிகளை வியப்பில் ஆழ்த்திய நாடுகளின் பட்டியலில் இணைந்த இலங்கை

சுற்றுலாப் பயணிகளை வியப்பில் ஆழ்த்திய நாடுகளின் பட்டியலில் இலங்கையும் இணைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, இந்தியா, தாய்லாந்து, மலேசியா மற்றும் பல நாடுகளுடன் இலங்கையும் இணைந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வளர்ச்சி இலங்கையை ஆசியாவின் சிறந்த சுற்றுலாத் தலங்களில் ஒன்றாக நிலை நிறுத்தியுள்ளது.

இந்தியா, தாய்லாந்து மற்றும் மலேசியா போன்ற நாடுகள் முன்னணி வகிப்பதால், இந்த குழுவில் இலங்கை இடம்பிடித்துள்ளமை சுற்றுலாத் துறையில் மிக முக்கிய வளர்ச்சி எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்த வருடத்தில் கடந்த 19 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் நாட்டுக்கு 2,023,470 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# சரக்கு ரயில் சாரதிகள் பணிப்புறக்கணிப்பு

சரக்கு ரயில்கள் மற்றும் எரிபொருள் ரயில்களின் சாரதிகள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று நள்ளிரவு முதல், சேவைகளிலிருந்து விலகத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ரயில் சாரதிகள் சங்கத்தின் செயலாளர் சந்தன வியந்துவ தெரிவித்துள்ளார்.

இரவு நேர ரயில் பயணங்களின் போது அதிகளவான யானைகள் ரயிலில் மோதி உயிரிழக்கின்றன.

இதற்கான தீர்வை பெற்றுத்தருமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ள போதும் இதுவரையில் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில், தமது கோரிக்கைக்கான தீர்வு கிடைக்காததால் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக சரக்கு ரயில்கள் மற்றும் எரிபொருள் ரயில்களின் சாரதிகள் தெரிவித்துள்ளனர்.





# திருமண பந்தத்தில் இணைந்தார் ஜீவன் தொண்டமான் இந்திய - இலங்கை அரசியல் பிரபலங்கள் பங்கேற்பு

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமானின் திருமணம் நேற்று இந்தியாவில் திருப்பத்தூரில் நடைபெற்று வருகின்றது.

தமிழ்நாட்டின் திருப்பத்தூரை சேர்ந்த சீதா ஸ்ரீநாச்சியார் என்பவரை ஜீவன் தொண்டமான் மணந்தார்.

இந்த திருமண நிகழ்வில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் அவரது பாரியார் பேராசிரியர் மைத்ரி விக்ரமசிங்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அத்துடன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன் மற்றும் இலங்கையின் பல நாடாளு-மன்ற உறுப்பினர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றுள்ளனர்.

மேலும், தேசிய முற்போக்கு கழகத்தின் கழகப் பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த், திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் மு.க.கனிமொழி உள்ளிட்ட அரசியல், வர்த்தக மற்றும் சினிமாத் துறைகளைச் சேர்ந்த பல முக்கியப் பிரமுகர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டுள்ளனர்.

















# ‘முரசு’ செய்தியாளர் சகாதேவராஜாவுக்கு ‘தேச அபிமானி ஊடக விபூஷணம்’ பட்டம்

“முரசு“ டிஜிட்டல் நாளிதழின் அம்பாறை மாவட்ட செய்தியாளரும் சிரேஷ்டஊடக வியலாளருமான வித்தகர் விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா நேற்று மாலை கல்முனை, மருதமுனையில் நடை பெற்ற மகாத்மா காந்தி நினைவு தேசிய கௌரவப் பட்டமளிப்பு விழாவில் ‘தேச அபிமானி ஊடக விபூஷணம்’ பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வு மருதமுனை கலாசார மத்திய நிலையத்தில் மலையக கலை கலாசார சங்கத்தின் தலைவர் ராஜா தலைமையில் கோலாகலமாக நடை பெற்றது. பதின்மருக்கு கௌரவப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

கல்முனை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம். ஜாபீர் பொன்னாடை போர்த்திப் பதக்கம் அணிவித்து விருது மற்றும் சான்றிதழ் வழங்கிக் கௌர வித்தார்.











# Amazon உயர்கல்வி நிறுவனத்தின் பிரம்மாண்டமான பட்டமளிப்பு விழா










சுமார் 17 வருடங்களாக உயர்கல்வித் துறையில் சேவையாற்றி வரும் Amazon College & Campus கல்விநிறுவனத்தின் மாபெரும் பட்டமளிப்பு விழா, 2025 ஆம் ஆண்டு நேற்று கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் – Lotus மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், Diploma, HND, Degree, Masters ஆகிய நிலைகளில் கல்வி பயின்ற சுமார் 200 மாணவர்கள் தங்களது பட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். குறிப்பாக, Psychology, Business Management, IT, English, Teacher Training போன்ற முக்கிய துறைகளில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.




# ஏ.ஐ. விடயத்தில் இறுதி முடிவை மனிதர்கள்தான் எடுக்க வேண்டும்

## ஜி 20 உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி உரை

செயற்கை நுண்ணறிவு மனித திறன்களை விரிவுபடுத்த வேண்டும் எனவும் இறுதி முடிவை மனிதர்களே எடுக்க வேண்டும் என்றும் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

தென்னாபிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க் நகரில் நடைபெற்ற ஜி 20 உச்சி மாநாட்டின் மூன்றாவது அமர்வில் "அனைவருக்கும் நியாயமான, நிலையான எதிர்காலம்" என்ற தலைப்பில் பிரதமர் மோடி உரையாற்றினார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"முக்கியமான தொழில்நுட்பங்கள் ஊக்குவிக்கப்படும் விதத்தில் அடிப்படை மாற்றம் வேண்டும். அத்தகைய தொழில்நுட்ப பயன்பாடுகள் நிதியை மையமாக கொண்டு இல்லாமல் "மனிதத்தை மையமாக கொண்டும், குறிப்பிட்ட நாட்டை மையமாகக் கொண்டு அல்லாமல் உலகளாவிய வகையிலும் இருக்க வேண்டும். இந்த தொலைநோக்குப் பார்வை இந்தியாவின் தொழில்நுட்பச் சூழல் அமைப்பில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. விண்வெளி பயன்பாடுகள், டிஜிட்டல் பரிவர்த்தனை என அனைத்திலும் இந்தியா முன்னணியில் உள்ள நிலையில், உலக அளவில் குறிப்பிடத்தக்க நன்மைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய செயற்கை நுண்ணறிவு இயக்கத்தின் கீழ், செயற்கை நுண்ணறிவின் நன்மைகள் நாட்டில் உள்ள அனைவரையும் சென்றடைவதை உறுதி செய்யும் நோக்கத்துடன் உயர் செயல்திறன் கொண்ட கணினி திறன், கட்டமைக்கப்பட்டு வருகிறது. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் உலகளாவிய பலன்களை கொடுக்கும் வகையில் மாற்றப்பட வேண்டும். வெளிப்படைத் தன்மை, மனித மேற்பார்வை, பாதுகாப்பு, தவறான பயன்பாட்டைத் தடுப்பது ஆகிய கொள்கைகளின் அடிப்படையில் உலகளாவிய புரிந்துணர்வு ஏற்பட வேண்டும்.

செயற்கை நுண்ணறிவானது மனித திறன்களை விரிவுபடுத்த வேண்டும். இறுதி முடிவை மனிதர்களே எடுக்க வேண்டும். "அனைவரின் நலன், அனைவரின் மகிழ்ச்சி" என்ற கருப்பொருளில் 2026 பெப்ரவரியில் இந்தியா, செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டை நடத்தவுள்ளது. இந்த முயற்சியில் அனைத்து ஜி20 நாடுகளும் இணைய அழைக்கிறேன்.

செயற்கை நுண்ணறிவு யுகத்தில், "இன்றைய வேலைகள்" என்பதிலிருந்து 'நாளைய திறன்கள்' என்ற வகையில் நமது அணுகுமுறையை விரைவாக மாற்ற வேண்டிய அவசியம் உள்ளது. புதுடில்லி ஜி20 உச்சி மாநாட்டில் திறன் பரிமாற்றம் குறித்து பேசப்பட்டது. வரும் ஆண்டுகளில் திறன் பரிமாற்றம் குறித்த உலகளாவிய கட்டமைப்புக் குழுவை உருவாக்க வேண்டும். நிலையான வளர்ச்சி, நம்பகமான வர்த்தகம், அனைவருக்கும் செழிப்பு ஆகியவற்றுடன் உலகளாவிய நல்வாழ்வில் இந்தியா உறுதியுடன் உள்ளது." என்று தெரிவித்துள்ளார்.





# எல்லா மக்களுக்கும் நல்லது செய்யவேண்டுமென்ற இலட்சியத்தோடுதான் அரசியலுக்கு வந்துள்ளோம்

## த.வெ.க தலைவர் விஜய் தெரிவிப்பு

எல்லா மக்களுக்கும் நல்லது செய்ய வேண்டும் என்ற லட்சியத்தோடுதான் அரசியலுக்கு வந்துள்ளோம் என்று த.வெ.க. தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரத்தில் உள்ள ஜேப்பியார் கல்லூரியில் நேற்று நடந்த உள்ளரங்கு மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் பேசிய விஜய்,

“தனது வழிகாட்டி என்பதால், தான் ஆரம்பித்த கட்சியின் கொடியில் அண்ணாவை வைத்தவர் எம்.ஜி.ஆர். அவர் ஆரம்பித்த கட்சியை கைப்பற்றியவர்கள் இப்போது என்னென்னவெல்லாம் பண்ணுறாங்கன்னு உங்களுக்கே தெரியுமே.

தனிப்பட்ட முறையில் எங்களுக்கும் அவர்களுக்கும், வாய்க்கால் வரப்பு தகராறு கிடையாது. அவர்களுக்கு வேண்டுமானால் நம் மீது வன்மம் இருக்கலாம். ஆனால், நாம் அப்படி கிடையாது. உங்களை, நம்மை பொய் சொல்லி ஏமாற்றி ஆட்சிக்கு வந்து நாடகமாடுபவர்களை கேள்வி கேட்காமல் விடப்போவது இல்லை. காஞ்சிபுரத்துக்கும் எனக்கும் தொடர்பு உண்டு. எனது முதல் களப் பயணம் பரந்தூரில்தான் தொடங்கியது. இப்போது ஒரு பெரிய மன வேதனைக்குப் பின்னர் மக்கள் சந்திப்புக்கு வந்துள்ளதும் இந்த காஞ்சிபுரத்துக்குத்தான்.

எல்லா மக்களுக்கும் நல்லது செய்ய வேண்டும் என்ற லட்சியத்தோடுதான் அரசியலுக்கு வந்துள்ளோம். அதனால்தான் மக்களிடம் செல் என்ற அண்ணாவின் வழியை பின்பற்றுகிறோம். ஆனால், மக்களிடம் செல் எனச் சொன்ன அண்ணாவை மறந்தது யார்? கொள்கை என்றால் கிலோ என்ன விலை எனக் கேட்கும் கட்சியை நடத்தும் முதல்வர், நமக்கு கொள்கையில்லை என சொல்கிறார். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என சொல்லும் நமக்கு கொள்கையில்லையா?

சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என சொன்னோம். சி.ஏ.ஏவை எதிர்த்தோம், வக்பு சட்டத்தை எதிர்த்து உச்ச நீதிமன்றம் சென்றோம், நமக்கு கொள்கை இல்லையா? நீட் தேர்வை ஒழிக்க கல்வியை மாநிலப் பட்டியலுக்கு கொண்டுவர சொன்ன நமக்கு கொள்கையில்லையா? சமத்துவம், சமவாய்ப்பு என சொல்லும் நமக்கு கொள்கையில்லையா? இவர்களின் கொள்கையே கொள்ளைதானே. இது மக்களுக்கு தெரியாதா?

இதுபோல மக்கள் பிரச்சினைகளை பேசுவதால் த.வெ.க. மீது அவதூறை பரப்புகிறது திமுக. நாம ஆட்சிக்கு வந்தால், அது என்ன வந்தால், வருவோம். மக்கள் நிச்சயமாக நம்மை ஆட்சிக்கு வரவைப்பார்கள். மக்களால் அமைக்கப்படும் நம் ஆட்சியில் என்ன செய்வோம் என்பதை தேர்தல் அறிக்கையில் சொல்வோம்.

நம் ஆட்சியில் எல்லோருக்கும் நிரந்தர வீடு, வீட்டுக்கு ஒரு பைக் இருக்க வேண்டும், வீட்டுக்கு ஒரு கார் இருப்பதும் நம் இலட்சியம், வீட்டில் ஒருவர் டிகிரி படித்திருக்க வேண்டும். வீட்டில் ஒருவருக்குக்கு வருமானம் கிடைக்கும் வகையில் வேலைவாய்ப்பை உருவாக்குவோம். தரமான அரசு மருத்துவமனைகள் இருக்கும். பருவமழையால் ஊர், மக்கள், விவசாயம் பாதிக்காத அளவு திட்டங்களை உருவாக்குவோம். நெசவாளர்கள், அரசு ஊழியர்களின் நலனை மேம்படுத்துவோம். சட்டம் ஒழுங்கை சிறப்பாக வைத்திருந்து, பெண்களுக்கு பாதுகாப்பு வழங்குவோம்.

இதனை எப்படி செயல்படுத்துவோம் என்பதை தேர்தல் அறிக்கையில் விளக்கமாக சொல்வோம். ஏற்கெனவே கொள்கை எதிரி யார், அரசியல் எதிரி யார் என தெளிவாக சொல்லியுள்ளோம். அதில் ஊசலாட்டமே இல்லை. நான் சொன்னதை செய்யாமல் விடமாட்டேன்.

அதென்ன தற்குறி... த.வெ.கவை ஆதரிக்கும் லட்சக்கணக்கான நண்பா, நண்பிகள், ஜென்ஸி கிட்ஸ்களை தற்குறி என சொல்லிவிட்டு, இப்போது அப்படி சொல்லவேண்டாம் என்கிறார்கள். தற்போது நடத்திய அறிவுத்திருவிழாவில் பேசிய ஒரு எம்.எல்.ஏ த.வெ.கவுக்கு ஆதரவாக பேசியுள்ளார். அவர் நம் கொள்கை தலைவர் அஞ்சலை அம்மாளின் சொந்தக்காரர். இந்த ஆதரவு இனி எல்லா வீட்டிலும் எதிரொலிக்கும்.

எம்.ஜி.ஆர். கட்சி ஆரம்பித்தபோதே, அதனை கூத்தாடி கட்சி என சொன்னார்கள். இப்போது நம்மையும் அப்படி சொல்கிறார்கள். மர்மயோகி படத்தில் எம்.ஜி.ஆர், ‘குறிவைத்தால் தவறமாட்டேன். தவறுமானால் குறியே வைக்க மாட்டேன்’ என்று சொல்லியிருப்பார். அதே போல, ஏன் இந்த விஜயை தொட்டோம், ஏன் விஜயுடன் உள்ள மக்களை தொட்டோம் என நினைத்து நினைத்து வருந்தப் போகிறீர்கள்.

மக்களிடமிருந்து வாக்கு வாங்கப் போகும் நாங்கள் தற்குறிகள் என்றால், மக்களிடமிருந்து ஏற்கெனவே வாக்கு வாங்கிய நீங்கள் யார்? மக்கள் எல்லோரும் உங்களுக்கு தற்குறிகளா? இந்த தற்குறிகள் எல்லோரும் ஒன்றாக சேர்ந்துதான், விடையே தெரியாத அளவுக்கு உங்கள் அரசியலை கேள்விக் குறியாக்க போகிறார்கள். இவர்கள் தற்குறிகள் கிடையாது. இவர்கள் தமிழக அரசியலின் ஆச்சர்ய குறி, மாற்றத்துக்கான அறிகுறி. இங்கே த.வெ.கவுக்கும், தி.மு.கவுக்கும்தான் போட்டி. “மை டியர் அங்கிள்” ஏற்கெனவே மக்கள் முடிவு செய்துவிட்டார்கள்.” என்றார்.







# போரை நிறுத்த ட்ரம்ப் முன்மொழிந்துள்ள 28 அம்சத் திட்டம் அமைதியை ஏற்படுத்தும்

## விளாடிமிர் புடின் தெரிவிப்பு

போரை நிறுத்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் முன்மொழிந்துள்ள 28 அம்ச திட்டம் இரு நாடுகளுக்கும் இடையே அமைதியை ஏற்படுத்தும் என்றும், உக்ரைன் இதை ஏற்க மறுத்தால் மேலும் பல பகுதிகளை ரஷ்யா கைப்பற்றும் எனவும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ரஷ்யா – உக்ரைன் போரை நிறுத்துவதற்கான 28 அம்ச அமைதி திட்டத்தை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் முன்மொழிந்துள்ளார்.

இதைத்தொடர்ந்து, அமெரிக்கா முன்வைத்துள்ள, இந்த 28 அம்ச சமாதான திட்டத்தை போர் நிறுத்தத்திற்கான தொடக்க புள்ளியாக ஏற்றுக்கொள்வதாக ரஷ்ய ஜனாதிபதி புடின் தெரிவித்துள்ளார்.

ஆனால், உக்ரைன் இந்த சமாதான திட்டத்தை ஏற்க மறுத்தால், ரஷ்ய படைகள் தொடர்ந்து முன்னேறும் எனவும், குபியான்ஸ்க் நகரை கைப்பற்றியது போல் மற்ற முக்கிய பகுதிகளையும் கைப்பற்றுவோம் என புடின் வெளிப்படையாக அச்சுறுத்தியுள்ளார்.

ட்ரம்பின் சமாதான திட்டத்தில் ரஷ்யாவின் நீண்டகால கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் நிபந்தனைகள் இடம் பெற்றுள்ளதால், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி இத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்தை ஏற்றுக்கொண்டால் தன்னுடைய மதிப்பை இழக்க நேரிடும் எனவும், இந்த சமாதான ஒப்பந்தத்தை ஏற்க வலியுறுத்தினால், நீண்டகால நட்பை அமெரிக்கா இழக்க நேரிடும் என குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைன் நலன்களுக்கு துரோகம் இழைக்காத மாற்று திட்டங்களை முன்வைக்க விரும்புவதாக அவர் உறுதியளித்து உள்ளார்.

மேலும், இந்த முன்மொழிவு ஐரோப்பிய நாடுகளுக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது. இது ரஷ்யாவுக்கு சாதகமாக இருப்பதாகவும், உக்ரைனின் இறையாண்மையையும், பரந்த பாதுகாப்பையும் பலவீனப்படுத்தக்கூடும் என அவர்கள் அஞ்சுகிறார்கள்.

இந்நிலையில், இந்த சமாதான திட்டத்திற்கு ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் பதிலளிக்குமாறு ட்ரம்ப் நிர்வாகம் உக்ரைனை வலியுறுத்தி உள்ளது.

# ஹிஸ்புல்லாவை தடுக்கத் தேவையான அனைத்தையும் தொடர்ந்து செய்வோம்

## இஸ்ரேலியப் பிரதமர் நெதன்யாகு தெரிவிப்பு

ஹிஸ்புல்லா தமக்கு எதிராக அதன் அச்சுறுத்தல் திறனை மீண்டும் நிலைநிறுத்துவதைத் தடுக்க தேவையான அனைத்தையும் தொடர்ந்து செய்வோம் என இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

காஸா பகுதியிலும் இதைத்தான் நாங்கள் செய்து வருகிறோம். போர் நிறுத்தத்திற்குப் பிறகு, ஹமாஸ் அதை மீறுவதை நிறுத்தவில்லை, அதன்படி நாங்கள் செயல்படுகிறோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இஸ்ரேலிய அமைச்சரவைக் கூட்டத்தின் போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இரண்டு வருடப் போருக்குப் பிறகு, அமெரிக்க மத்தியஸ்தத்துடன் இஸ்ரேலுக்கும் ஹமாஸ்/க்கும் இடையே




போர் நிறுத்தம் அமுலுக்கு வந்தது.

எனினும் அந்த போர் நிறுத்தம் பலவீனமானதாகவே பார்க்கப்படுகிறது.

எதனையும் பொருட்படுத்தாமல் தாம் சுயாதீனமாக முடிவுகளை எடுப்பதாக நெதன்யாகு வலியுறுத்தினார்.

இஸ்ரேல் அதன் சொந்த பாதுகாப்பிற்கு பொறுப்பாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.











# சைவப்புலவர் சங்கத்தின் 62 ஆவது பட்டமளிப்பு விழா

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் 62ஆவது பட்டமளிப்பு விழாவும் சைவ மாநாடும் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

அகில இலங்கை சைவப்புலர் சங்கத்தின் தலைவர் கார்த்திகேசன் கமலநாதன் தலைமையில் யாழ்ப்பாணம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை வீரமணி ஐயர் கலையரங்கில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடத்தின் பேராசிரியர் ம.பால கைலாசநாதரக் குருக்கள் கலந்து கொண்டார். சிறப்பு அதிதிகளாக தவத்திரு வேலன் சுவாமிகள் மற்றும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் அதிபர் செந்தமிழ் சொல்லருவி லலிசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சைவப்புலவர் பட்டங்களை பெற்றவர்களுக்கான பட்டங்களும் வழங்கி வைக்கப்பட்டன. சைவத்துக்காக நீண்ட காலம் சேவையாற்றியவர்களுக்கு விசேட கௌரவ பட்டங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.















# மத இணக்கம், சமூக ஒற்றுமைத் திட்டம் கிளிநொச்சியில் வெற்றிகரமாகப் பூர்த்தி

(பா.சதீசன்)

கிளிநொச்சியில் மனிதாபிமான மேம்பாட்டு அமைப்பு ஏற்பாடு செய்த மதம் மற்றும் நம்பிக்கை சுதந்திரம் மற்றும் சமூக ஒற்றுமை தொடர்பான சிறப்பு பயிற்சி நிகழ்ச்சி நேற்று முன்தினம் காலை 9 மணி முதல் மாலை 4.30 மணி வரை இளைஞர்களின் பங்கேற்புடன் வெற்றிகரமாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் NCEASL அமைப்பின் திருமதி வி. அலஷியா, திறன் மேம்பாட்டு அதிகாரி திருமதி வி.விஜிதா, HDO SAFE FO உறுப்பினர்கள், மனித உரிமைகள் பாதுகாவலர்கள் மற்றும் கல்வியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு பயிற்சியை வழிநடத்தினர்.

இளைஞர்களின் மதம் மற்றும் நம்பிக்கை சுதந்திரக் கொள்கைகள் குறித்த விழிப்புணர்வை உயர்த்துவது, அமைதியான இணைந்த வாழ்வை ஊக்குவிப்பது மற்றும் சமூக நல்லிணக்கத்தை வலுப்படுத்தும் அவர்களின் பங்கினை மேம்படுத்துவது ஆகியவை இந்த பயிற்சியின் முக்கிய நோக்கங்களாக அமைந்தன.

பங்கேற்பாளர்கள் ஊடாகவும் கலந்துரையாடல்கள், நடைமுறைப் பயிற்சிகள் மற்றும் மத சகிப்புத்தன்மை, உரிமைகள் தொடர்பான அனுபவப் பகிர்வுகளில் ஈடுபட்டு அவர்கள் பயனடைந்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளடக்கமான, மரியாதைமிக்க சமூகத்தை உருவாக்க இளைஞர்களை அதிகாரமளித்து அவர்களின் பங்குபற்றலை உயர்த்துவதே இந்த முயற்சியின் நோக்கமாகும் என மனிதாபிமான மேம்பாட்டு அமைப்பு தெரிவித்துள்ளது.















# யாழ் மத்திய கல்லூரி நீச்சல் தடாக புனரமைப்புக்கான நினைவுக்கல் திரை நீக்கம் செய்ய மறுத்த அமைச்சர்!

நீண்ட காலம் பராமரிப்பின்றி கைவிடப்பட்ட யாழ் மத்திய கல்லூரி நீச்சல் தடாகப் புனரமைப்புப் பணிகளை எவ்வாறு முன்னெடுப்பது என்ற குழப்பம் காரணமாக ஆரம்ப கட்ட நிகழ்வில் வைக்கப்பட்ட நினைவுக்கல்லை திரை நீக்கம் செய்ய மறுத்து விளையாட்டு துறை அமைச்சர் வெளியேறினார்.

யாழ் மத்திய கல்லூரி நீச்சல் தடாகப் புனரமைப்பு பணிகளின் ஆரம்ப கட்ட வேலைகளை முன்னெடுக்க விளையாட்டு துறை அமைச்சர் சுனில் குமார கமகே நேற்று கல்லூரிக்கு விஜயம் செய்த நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் – 2012ம் ஆண்டு ஆழம் கூடிய டைவிங் நீச்சல் தடாகம் யாழ் மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. சில வருடங்களிலேயே நீச்சல் தடாகம் பராமரிப்பின்றி கைவிடப்பட்டது.

தற்போதைய அரசாங்கம் மீளவும் அந்த நீச்சல் தடாகத்தைப் புனரமைக்க நடவடிக்கைகளை எடுத்திருந்தது.

இந்த நிலையில் நேற்றைய தினம் மத்திய கல்லூரிக்கு விஜயம் செய்த விளையாட்டுத் துறை அமைச்சர் நீச்சல் தடாகத்தை பார்வையிட்டார். டைவிங் நீச்சல் தடாகம் எனும் போது ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையானவர்களே பயன்படுத்துவார்கள் என்றும், அதே நேரம் சாதாரணமான ஆழம் குறைந்த நீச்சல் தடாகமாக இதை மாற்றினால் பெரும்பாலானவர்கள் பயன்படுத்துவார்கள், பொது நிதியில் செய்யும் போது அதிக எண்ணிக்கையானோருக்கு அது நன்மை அளிக்கும் என்று முடிவு எடுத்து அவ்வாறு செய்யலாம் என யோசனையை முன்வைத்தார் அமைச்சர்.

அந்த முயற்சிக்கு யாழ் மத்திய கல்லூரி மட்டத்தில் ஆதரவு மற்றும் எதிர்ப்பு என இரு வேறுபட்ட நிலைப்பாடு காணப்பட்டது.

இந்நிலையில் இன்று மத்திய கல்லூரிக்கு சென்ற அமைச்சர் தனது நிலைப்பாட்டை அங்கு தெரிவித்தபோது உள்ளவாறே புனரமைத்து தருமாறு ஒரு தரப்பும், சாதாரண நீச்சல் தடாகமாக மாற்றி புனரமைத்தாலும் பிரச்சினை இல்லை என கூறி அமைச்சரின் கருத்தையும் ஏற்று மற்றொரு தரப்பும் கருத்து தெரிவித்தமையால் குழப்பம் ஏற்பட்டது.

அந்தப் புனரமைப்புக்கான நினைவுக்கல் திரை நீக்கம் செய்ய வைக்கப்பட்டிருந்த நிலையில், நீச்சல் தடாகம் அருகில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் உரையாற்றி விட்டு, திரை நீக்கம் செய்யமாலே விளையாட்டு துறை அமைச்சர் வெளியேறினார்.

பாடசாலை அதிபர் உள்ளிட்ட சிலர் அமைச்சரை திரை நீக்கம் செய்யுமாறு வலியுறுத்தி கேட்ட போதும் அமைச்சர் அதனை மறுத்தார்.

பாடசாலை மட்டத்தில் ஒருமித்த நிலைப்பாட்டை எட்டிய பின்னர் அதற்கேற்றவாறு புனரமைப்பு பணிகளை முன்னெடுக்க முடியும் என தெரிவித்து அமைச்சர் வெளியேறினார்.

இதன்போது அமைச்சருடன் நாடாளுமன்ற உறுப்பினர் கருணை நாதன் இளங்குமரன், யாழ் மாவட்ட செயலாளர் மருதலிங்கம் பிரதீபன், யாழ் மாநகர சபை உறுப்பினர் கபிலன் சுந்தரமூர்த்தி எனப் பலரும் கலந்து கொண்டனர்.















# லண்டனில் தமிழீழ தேசிய கொடிநாள் வாரம்

(பா.சதீசன்)

லண்டனில் தமிழீழ தேசிய கொடி நாள் வாரத்தை முன்னிட்டு, நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஏற்பாட்டில் பிரித்தானியாவின் பல பகுதிகளில் நடைபெற்று வரும் நினைவு நிகழ்வுகளின் ஒரு பகுதியாக நேற்றையதினம் கொடி நாள் இடம்பெற்றது.

நேற்றையதினம் பிற்பகல் 12 மணி முதல் மாலை 3 மணி வரை லண்டன் டிராபிளாகர் சதுக்கத்தில் (Trafalgar Square) தமிழர்கள் பெருந்திரளாகக் கூடி கொடிநாள் அனுஷ்டிப்பை கௌரவத்துடன் கொண்டாடினர்.

புலிக்கொடியை ஏந்தியவாறு மக்கள் பேரணியாக நகர்ந்து சதுக்கத்தை நோக்கி அணிவகுத்துச் சென்றனர். பின்னர் தமிழீழ தேசியக் கொடி உயர்த்தப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது. அனைத்து வயதினரும் ஒருங்கிணைந்து பங்கேற்ற இந்நிகழ்வு, தமிழர் சமூகத்தின் தேசிய உணர்வையும் ஒற்றுமையையும் வெளிப்படுத்தும் வகையில் அமைந்தது.

















# யாழில் உள்ளக விளையாட்டரங்குக்கு பழைய பூங்காவில் அடிக்கல் நடுகை

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் உள்ளக விளையாட்டரங்கை பழைய பூங்கப் பகுதியில் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்னெடுக்கப்பட்டது.

உள்ளக விளையாட்டு அரங்கிற்கான அடிக்கல்லினை அமைச்சர்கள் மற்றும் ஆளுநர், நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர் நட்டு வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில் விருந்தினர்களின் உரைகள் இடம்பெற்றன.

நிகழ்வில் தெற்காசிய ரீதியில் இடம்பெற்ற விளையாட்டுப்போட்டிகளில் பங்குபற்றிய வீரர்களுக்கு விருந்தினர்

தொடர்ச்சி▼























# யாழில் உள்ளக விளையாட்டரங்குக்கு பழைய பூங்காவில் அடிக்கல் நடுகை

தொடர்ச்சி▲

களால் பதக்கங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இதன்போது சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே, வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், நாடாளுமன்ற உறுப்பினர் கருணைநாதன் இளங்குமரன், யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் உத்தியோகத்தர்கள், விளையாட்டு வீரர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.















# துயிலும் இல்லங்களில் சுடர் ஏற்றும் சமயம் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுங்கள்

## ஜனாதிபதியிடம் அருட்தந்தை சத்திவேல் கோரிக்கை



(பா.சதீசன்)

தமிழர் தேசமெங்கும் மாவீரர் துயிலும் இல்லங்கள் தூய்மைப்படுத்தப்பட்டு சுடர் ஏற்றுவதற்காக ஆயத்தப்பட்டு கொண்டிருக்கும் வேளையில் அவர்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்த அரசியல் கைதிகளின் விடுதலையையும் வலியுறுத்துவோம் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

நேற்றுத் தாம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"எம்முடைய ஆட்சியில் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்வோம்" என தற்போதைய ஜனாதிபதி அவரது ஜனாதிபதி தேர்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தல் மேடைகளில் முழங்கினார். இது தமிழர்களுக்கு கொடுத்த அரசியல் வாக்குறுதியாகும். இதனை நிறைவேற்றுவதைவிடுத்து காலத்தை இழுத்தடிப்பது என்பது - இன்று வரை காலம் தாழ்த்துவது என்பது - அது தொடர்பில் எத்தகைய நடவடிக்கையும் எடுக்காதமை என்பது - அரசியல் வாக்குறுதி கொலையாகும். இதனையே கடந்த கால ஆட்சியாளர்களும் செய்தனர். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுமாறு மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என அரசியல் கைதிகள் உட்பட பல்வேறு தரப்பினர் பல்வேறு மட்டங்களில் பல்வேறு வடிவங்களில் தொடர்ச்சியாக கடந்த காலங்களில் பல போராட்டங்கள் நடத்தி குரல் கொடுத்தப்போதும் கடந்த கால ஆட்சியாளர்கள் அதற்கு செவிமடுக்கவில்லை. அவர்கள் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றே சிந்தித்தனர். தற்போதைய ஜனாதிபதி அரசியல் கைதிகளை விடுதலை செய்வோம் என கூறியபோது அரசியல் கைதிகளும் அவர்களது குடும்பமும் மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழர்களும் மகிழ்ந்தனர். அதற்கு தமிழர்கள் தம் வாக்குகளை அள்ளி வழங்கி நன்றி தெரிவித்தார். அந்த நன்றி உணர்வின் மீது தற்போதைய அரசாங்கம் மண்ணை அள்ளி கொட்டிக் கொண்டிருக்கின்றது. இதனை தொடர்ந்தும் அமைதியோடு பார்த்திருக்கும் நிலையிலும் தமிழர்கள் இல்லை எனலாம்.

பாதாள உலகை வளர்த்துவிட்டு அதனோடு கைகோர்த்து அரசியல் செய்தவர்கள், சர்வதேசப் போதை பொருள்களுக்கு இலங்கையில் சந்தையை உருவாக்கி உழைத்தவர்கள், அவர்களின் அரசியல் காவலர்களாக உள்ளவர்களே பயங்கரவாதிகளாவர். ஜனாதிபதியின் கூற்றின் படி அவர்கள் சுதந்திரமாக நாடாளுமன்றத்தை அலங்கரித்துக் கொண்டு சுகபோகும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களே உண்மையான பயங்கரவாதிகளாவர். இந்நிலையில் இன விடுதலையை மையப்படுத்தி தேச விடுதலைக்காக செயற்பட்டவர்களை பயங்கரவாதிகள் என கடந்த கால ஆட்சியாளர்களைப் போன்று தொடர்ந்து சிறையில் அடைத்து வைத்திருப்பதில் எந்த விதமான நியாயம் இல்லை எனலாம்.

தற்போது சிறையில் பத்திற்கும் குறைவான அரசியல் கைதிகளே உள்ளனர். இவர்கள் சமூக குற்றவாளிகள் அல்லர். பாதாள உலகின் அங்கத்தவர்களும் அல்லர். போதை வஸ்துக்கு அடிமையினவர்களுமல்லர். அதன் விநியோகஸ்தர்களும் அல்லர். இயக்கக் கட்டுப்பாட்டுக்குள், அதன் ஒழுக்க நெறிகளைப் பின்பற்றிய ஒழுக்க சீலர்களாவர். இவர்களை விடுவிப்பதன் மூலம் சமூகத்திற்கு எந்தப் பாதிப்பும் ஏற்படப் போவதில்லை. எனவே உடனடியாக இவர்களை விடுதலை செய்ய வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கேட்கின்றோம்.

தற்போதைய அரசியல் கைதிகள் அனைவரும் தண்டனைக் காலத்தை விட அதிகமான காலத்தை சிறைகளுக்குள் கழித்துவிட்டனர். தற்போது நிலையில் இவர்களுடன் சேர்ந்து இவர்களது குடும்பங்களும் தண்டனையை அனுபவிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். உதாரணமாக ஆனந்தசுதாகரன் கடந்த 17 வருட காலமாக சிறையில் இருக்கின்றார். இவரது மனைவி கணவரின் சோகம் தாளாது மரணத்தை தழுவிய நிலையில் குழந்தைகள் தாயை இழந்து பாட்டியின் அரவணைப்பில் வாழ்ந்தவர்கள், தற்போது பாதுகாப்பற்ற வாழ்வுக்குள் தள்ளப்பட்டுள்ளனர். அவர்களும் தண்டனையை அனுபவிப்பது சமூக குற்றமாகும். ஆனந்த சுதாகரனை விடுதலை செய்வார் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்தப்போதும் அது நடக்கவில்லை. ஆனந்த சுதாகரனை விடுதலை செய்வதன் மூலம் அவரின் குழந்தைகளின் எதிர்கால வாழ்வைப் பாதுகாக்க முடியும். அதனை தற்போதைய ஜனாதிபதி செய்வார் என எதிர்பார்க்கின்றோம்.

அதேபோன்று அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவித்து தமிழ் மக்களின் அரசியல் கௌரவத்தையும் கொடுத்த வாக்குறுதியையும் நிறைவேற்றுமாறு கேட்கின்றோம்.

தமிழர் தேசமெங்கும் மாவீரர் துயிலும் இல்லங்கள் தூய்மைப்படுத்தப்பட்டு சுடர் ஏற்றுவதற்காக ஆயத்தப்பட்டு கொண்டிருக்கும் வேளையில் அவர்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்த அரசியல் கைதிகளின் விடுதலையையும் வலியுறுத்துவோம். தமிழர் தாயக அரசியல் பலமடைந்து முன் செல்வதற்கான உறுதி ஏற்று சுடரேற்றுவதன் மூலம் தமிழ் தேசம் ஒளி வீசும். அதுவே மாவீரர்களுக்கு நாம் செய்யும் நன்றி கடனும் தமிழர் தாயகத்திற்கு கடமையுமாகும் என்பதை உணர்வோம் - என்று தெர்வித்துள்ளார்.




# திருமலை ஆக்கிரமிப்பு, ரில்வினின் வருகை இரண்டுக்கும் எதிராக லண்டனில் போராட்டம்

(பா. சதீசன்)

தமிழர் தாயகத்திற்காக உயிர் தியாகம் செய்த மாவீரர்களை நினைவுகூரும் காலப்பகுதியில், தமிழின அழிப்பிற்கு பக்கபலமாக இருந்தவர்களும், தற்போதைய ஆட்சியில் பொறுப்பேற்று செயல்படுவோரையும் கண்டித்து லண்டனில் மாபெரும் தமிழ்த் தேசியப் போராட்டம் ஒன்று நேற்றையதினம் இடம்பெற்றது.

திருகோணமலையில் புத்தரின் பெயரை முன்வைத்து சிங்கள பௌத்த பேரினவாத அரசால் தொடர்ச்சியாக ஆக்கிரமிக்கப்பட்டு வரும் சூழ்நிலையில், பிரித்தானியாவிற்கு பயணம் மேற்கொண்ட பேரினவாத அமைப்பான

தொடர்ச்சி▼










# திருமலை ஆக்கிரமிப்பு, ரில்வினின் வருகை இரண்டுக்கும் எதிராக லண்டனில் போராட்டம்






தொடர்ச்சி▲

ஜே.வி.பி. – தேசிய மக்கள் சக்தி சார்பான ரில்வின் சில்வாவின் வருகையை எதிர்த்தும் இந்தக் கண்டன போராட்டத்தில் குரல் எழுப்பப்பட்டது.

நேற்றையதினம் பிற்பகல் 1 மணியளவில் லண்டன் Alperton Community School, Ealing Road, Wembley பகுதியில் நடைபெற்ற இப்போராட்டம் தமிழீழ சுய நிர்ணய அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

தமிழ்த் தேசிய தளத்தில் செயற்படும் பல அமைப்புகளும் செயற்பாட்டாளர்களும் ஒன்றிணைந்து நடத்திய இந்தப் போராட்டத்தில், ரில்வின் சில்வாவின் ஐரோப்பிய சுற்றுப்பயணத்திற்கும், தமிழர் தாயகத்தை இலக்காகக் கொண்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கும், தமிழின அழிப்பை மறைக்கும் அரசியல் பொய்ப்பிரசாரத்திற்கும், எதிரான கோஷங்கள் எழுப்பப்பட்டன. கண்டனப் பதாகைகளும் தாங்கிச் செல்லப்பட்டன.

பிரித்தானியத் தமிழர்கள் பெருமளவில் இதில் பங்கேற்று, தமிழர் தன்னாட்சி, தேச உரிமை, மற்றும் தாயக பாதுகாப்பு குறித்த தங்களின் உறுதியான அரசியல் நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினர்.

இந்தப் போராட்டம், சர்வதேச அரங்கில் தமிழர் உரிமை கோரிக்கையைத் தொடர்ந்து முன்வைப்பதற்கான ஒரு வலுவான பதிவாக அமைந்தது.







# கிண்ணியா உப்பளச் செய்கை நிலம் கடும் மழையினால் குளமாக மாறியது

திருகோணமலை கிண்ணியா கச்சக்கொடித்தீவு பகுதியில் உள்ள உப்பளம் கனமழை காரணமாக நீரில் மூழ்கியுள்ளது.

பலத்த மழையுடனான கால நிலை காரணமாக இந்த உப்பளச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன் நீரிலும் மூழ்கியுள்ளது.

உப்பளச் செய்கையாளர்கள் மாரி மழை காலங்களில் உப்பளச் செய்கையில் ஈடுபட முடியாத நிலை காணப்படுகிறது.

அதிக வெப்ப நிலை மூலமே உப்பு உற்பத்தியை பெறக் கூடிய நிலை இங்கு காணப்படுகிறது.

உப்புச் செய்கை உற்பத்தியை விருத்தி செய்வதன் ஊடாக அதிக வருமானங்களை ஈட்ட முடியும் என எதிர்பார்க்கப்படுவதுடன் கால நிலையின் மாற்றம் ஏதோ ஒரு வகையில் உப்புச் செய்கையாளர்களை பாதிக்கின்றது. இதன் மூலம் அவர்களது வாழ்வாதாரமும் பாதிக்கப்படுகின்றது.

# இன்றைய ராசி பலன்கள் -24.11.2025




தன்னம்பிக்கையுடன் செயற்பட்டால் வெற்றி பெறலாம். உங்களிடம் காணப்படும் உற்சாகமான போக்கு காரணமாக நீங்கள் உங்கள் செயல்களை எளிதாக ஆற்றுவீர்கள்.

பணியில் உங்களுக்கு ஏற்படும் திருப்தியான உணர்வு காரணமாக நீங்கள் பணிகளை சரியான நேரத்தில் முடிக்க இயலும்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். உங்களின் நேர்மையான அணுகுமுறை காரணமாக இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை அடைவதற்கு அதிக பணம் காணப்படும்.

உங்கள் மனதில் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




நீங்கள் முன்பு எடுத்த விவேகமான முடிவு காரணமாக இன்று உங்களின் நாள் வெற்றிகரமாக அமையும். உங்களிடம் இன்று உறுதியும் உற்சாகமும் காணப்படும்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான நிலை காணப்படும்.சக பணியாளர்களுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். உங்கள் செயல்திறனுக்கு பாராட்டு பெறுவீர்கள்.

நீங்கள் நேர்மறையான மற்றும் வெளிப்படையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிக்கலாம்.

இன்று பண வரவு காணப்படும். உங்கள் எதிர்கால பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பணத்தை சேமிப்பீர்கள்.

உங்களின் நேர்மறை யான கண்ணோட்டம் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்களுக்கு எதிர்பாராத நன்மைகள் நடக்கும். என்றாலும் முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல.

பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளைக் கையாளும்போது இன்று பொறுமை மேற்கொள்ளவேண்டியது அவசியம்.

உங்களின் குழப்பமான மனநிலையை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. தேவையற்ற செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று ஆரோக்கியம் அவ்வளவு சிறப்பாக இருக்காது. நீங்கள் தலைவலியால் பாதிக்கப்படுவீர்கள். அமைதியான போக்கு நல்ல பலன் தரும்.




பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். உங்கள் உணர்வுகளை கட்டுபடுத்த வேண்டும். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலைத் தரும்.

பணியில் திருப்தியின்மை காணப்படும். திட்டமிட்ட முயற்சியின் மூலம் உங்கள் வளர்ச்சியில் ஏற்படும் தடைகளை ஜெயிக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். உறவில் நல்லிணக்கத்தைப் பராமரிக்க எதிர்மறை எண்ணங்களை தவிர்த்தல் வேண்டும். மனம் திறந்து பேச வேண்டும்.

உங்கள் தந்தையின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக இன்று சேமிப்பதற்கும் வாய்ப்பு இருக்காது.

இன்று செரிமானப் பிரச்சினைகள் ஏற்படலாம்.எனவே தண்ணீர் அதிகமாகப் பருகுங்கள்.




இன்று நல்ல பலன்கள் கிடைக்கும் நாள். திட்டமிட்ட முயற்சியும் நேர்மறை எண்ணங்களும் உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும்.

வேலைகள் அதிகமாக காணப்பட்டாலும் நீங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் செயல்திறனில் உங்கள் தன்னம்பிக்கை வெளிப்படும்.

உங்கள் துணையுடனான உறவில் நல்லிணக்கம் பராமரிப்பீர்கள். குடும்பத்தில் நடக்கும் சுப நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு இருவரும் மகிழ்ச்சியடைவீர்கள்.

இன்று உங்களிடம் கணிசமான பணம் காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் நம்பிக்கை நிறைந்த மன ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் வளர்ச்சிக்கான முயற்சிகளை எடுப்பீர்கள். இன்று உங்களிடம் பதட்டம் காணப்படும். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதல் தரும்.

உங்கள் மேலதிகாரிகளுடன் நல்லுறவு காணப்படாது. நேர்மையாக பணியாற்றுவது சவாலானதாக இருக்கும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை தவிர்க்க வேண்டும். இல்லாவிடில் உறவில் நல்லிணக்கம் பாதிக்கப்படும். உறவுப் பிணைப்பை வலுப்படுத்த அன்பாக இருங்கள்.

உங்களின் அஜாக்கிரதை காரணமாக இன்று பயணத்தின்போது பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டியது அவசியம்.

உங்களிடம் தேவையற்ற கவலைகள் காணப்படும். இதனால் தலைவலிக்கு ஆளாவீர்கள்.




இன்று சிறிது மந்தமாக காணப்படுவீர்கள். திட்டமிட்ட முயற்சியும் செயல்களில் விழிப்புணர்வும் தேவை. இன்று உங்களுக்கு அதிர்ஷ்டம் குறைவாக இருக்கும்.

பணிகள் அதிகமாக இருப்பதன் காரணமாக உங்களிடம் கவனக் குறைவு காணப்படும். திட்டமிட்டு கவனமுடன் இருந்தால் சிறப்பாக பணியாற்றலாம்.

உங்கள் துணை உங்களிடம் வேறுபட்டு இருப்பதாக உணர்வீர்கள். இருவரும் மனம் திறந்து பேசுவதன் மூலம் இந்த நிலையை சமாளிக்கலாம்.

பண இழப்பு காணப்படுகின்றது. செலவுகள் அதிகமாக காணப்படுவதன் காரணமாக இன்று பணம் கையாள்வது கடினமாக இருக்கும்.

இன்று செரிமானப் பிரச்சினைகள் ஏற்படலாம். எனவே தண்ணீர் அதிகமாகப் பருகுங்கள்.




இன்று நீங்கள் கடின உழைப்பின் மூலம் வெற்றி காணலாம். ஆன்மீக ஈடுபாடு மற்றும் ஏழைகளுக்கு செய்யும் உதவி மூலம் ஆறுதல் பெறலாம்.

பணிகள் அதிகமாகவும் சவாலானதாகவும் இருக்கும். வேலை தொடர்பான பயணம் காணப்படும்.

உங்கள் துணையுடன் ஏற்படும் தவறான புரிந்துணர்வு காரணமாக உறவில் நல்லிணக்கம் பாதிக்கும். நீங்கள் சிறிது ஏமாற்றகரமாக உணர்வீர்கள்.

இன்று கூடுதல் செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

பதட்டம் காரணமாக ஆரோக்கியம் பாதிக்கப்படும். ஆரோக்கியமாய் இருக்க அமைதியாய் இருங்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள்.

# இன்றைய ராசி பலன்கள் -24.11.2025




இன்று உங்கள் வளர்ச்சிக்கான முயற்சிகள் எடுக்கலாம். விரைவான செயல்கள் மூலம் வெற்றி காண் பீர்கள்.

உங்களின் சிறந்த முயற்சி மூலம் உங்கள் செயல்திறனை மேம் படுத்த இயலும். உங்களின் தனித்த திறனும் திறமைகளும் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே நல்ல புரிந்துணர்வும் நல்லிணக்கமும் காணப்ப டும். இருவரும் பொருத்தமான ஜோடியாக இருந்து மகிழ்வீர்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பை அதிகரிக்கும் நிலை காணப்படும்.

உங்கள் மனதில் காணப்படும் மகிழ்ச்சி காரண மாக இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று சில ஏமாற்றங்கள் காணப் படும். எந்த விஷயத்தையும் யதார்த் தமாக கையாள வேண்டும். சவாலான சூழ்நிலைகளை எந்தவிதமான எதிர் பார்ப்புமின்றி தைரியமாகக் கையாள வேண்டும்.

உங்கள் சக பணியாளர்களிடம் நல்லுறவு காணப்படாது. அதிகப்படியான பணிகள் கவலையை அளிக்கும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வும் உறவில் நல்லிணக்கமும் காணப்படும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். பண இழப்பு ஏற்படாமல் இருக்க சிறப்பாக திட்டமிட வேண்டும்.

வயிற்று வலியினால் சில பிரச்சினைகள் ஏற்படும். நீங்கள் சுறுசுறுப்பாக இருக்க தண்ணீர் அதிகமாகப் பருகுங்கள்.




இன்றைய நாள் சாதகமான பல-ன்கள் தருவதைக் காண்பீர்கள். சமந-்லையோடு இருந்தால் சரியான முடி-வெடுத்து வெற்றி காணலாம். இன்று உங்களிடம் அமைதியும் திருப்தியும் காணப்படும்.

உங்களின் தனித்த திறன் மூலம் நீங்கள் சிறப்பாக செயலாற்றுவீர்கள். உங்கள் முயற்சிக்கான பாராட்டை உங்கள் மேல திகாரிகளிடமிருந்து பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள். நண்பர்களின் இல்லத்திற்கு உங்கள் துணையை அழைத்துச் செல்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். இன்று உங்களால் பணம் சேமிக்க இயலும்.

இன்று முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் வலி மையுடன் காணப்படுவீர்கள்.




இன்றைய நாள் உங்களுக்கு அனுகூலமாக இருக்காது. நீங்கள் உணர்ச்சிவசப்படுவீர்கள். இன்று வெற்றி பெறுவதற்கு அமைதியான கட்டுப்பாடான அணுகுமுறை தேவை.

திட்டமிட்டு பணியாற்றுவதன் மூலம் பணியில் தவறுகளை தவிர்க்கலாம். என்றாலும் உங்கள் மேலதிகாரிகளிடம் நன் மதிப்பை இழப்பீர்கள்.

உங்கள் துணையிடம் கடுமையாக நடந்து கொள் வதன் மூலம் உறவில் மகிழ்ச்சியும் நல்லிணக்கமும் பாதிக்கும். எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத் துக் கொள்வதன் மூலம் உறவுப் பிணைப்பை வலுப்படுத்த முடியும்.

பயணத்தின்போது பண இழப்பு ஏற்பட வாய்ப் புள்ளது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். இன்று மோசமான ஆரோக்கியம் காணப்படும். தோள்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.





# ரீ – 56 ரக துப்பாக்கியும் இரு மகஸின்களும் பெரியநீலாவணை பொலிஸ் பிரிவில் மீட்பு

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் பெரிய நீலா வணை பொலிஸ் பிரிவில் உள்ள புறநகர் பகுதி வீடு ஒன்றில் குசன் கதிரையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரீ-56 ரக துப்பாக்கியும், அதற்கான 2 மகஸின்கள் என்பன மீட்கப்பட்டிருக்கின்றன.

கொழும்பில் இருந்து வருகை தந்த பொலிஸ் குழு ஒன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இவற்றை மீட்டு எடுத்துச் சென்றிருக்கின்றனர் என நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

மீட்கப்பட்ட துப்பாக்கி ஏதாவது குற்றச் செயலுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதா அல்லது கடந்த காலங்களில் அப்பகுதி யில் இயங்கிய ஆயுதக்குழுக்களிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டதா என்பன தொடர்பில் மேலதிக விசார ணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தத் துப்பாக்கியை மறைத்து வைத் திருந்த குடும்பஸ்தர் 07 வருடங்களாக காணாமல் ஆக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவித்து அம்பாறை மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது.

தனது தந்தை இவ்வாறு ஆயுதத்தை மறைத்து வைத்திருந்தமையை மகன் அறிந்து, அத்துப்பாக்கியை உத்தியோக பூர்வமாக அரசாங்கத்திடம் ஒப்படைப்ப தற்கு ஜனாதிபதி செயலகத்தின் மக்கள் தொடர்பாடல் அதிகாரியை கடிதம் ஊடாக அணுகியுள்ளார்.

இதற்கமைய ஜனாதிபதி செயலகத் தின் பணிப்புரைக்கமைய கொழும் பில் உள்ள பொலிஸ் குழுவினர் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவில் உள்ள வீட்டை அணுகி அவ்வாயுதத்தை எடுத்து சென்றிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

மேலும் இவ்வாயுத்தை சட்டவிரோத மாக வைத்திருந்ததாக சந்தேகக்கிக்கப் படும் நபர் விமான ரிக்கட் மற்றும் விசா வழங்குதல் தொடர்பான உப முக வராக செயற்பட்டுள்ளமையுடன் சுமார் ஏழுக்கும் மேற்பட்ட மொழிகளில் அறிவு கொண்டவராக தன்னை இனங் காட்டி சமூகத்தில் நடமாடி வந்துள்ளமை தெரியவந்துள்ளது.